# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## வடமாகாணத்தின் 9 பிரதேச வைத்தியசாலைகளுக்கான கணினி வலையமைப்பை வழங்குதல், பொருத்துதல், மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை – 2019

**PDHS/NP/NET/2019**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் வழங்குதல், பொருத்துதல், மற்றும் நிறுவுதலுக்கான கணினி வலையமைப்பை அச்சுவேலி, அக்கராயன், தர்மபுரம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, பூவரசங்குளம், அடம்பன், பேசலி ஆகிய 9 பிரேதேச வைத்தியசாலைகளில் வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, தகைமையுள்ள விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது.

3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியிலே வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை பரிசீலிக்க முடியும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 26 மார்ச் 2019 ஆம் திகதி தொடக்கம் 15 ஏப்ரல் 2019 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.4,000 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6. பெறுகைப்பிணை ரூபா.90,000 ஆக அமையும். மதிப்பீட்டு செலவு 9 மில்லியன் அத்துடன் பெறுகை செல்லுபடியாகும் காலம் பெறுகையின் முடிவுத்திகதியிலிருந்து 03 மாதங்களிற்காகும். அனைத்து வேலைகளும் ஒப்பந்த அளிப்பு செய்ததிலிருந்து 90 நாட்களுக்குள் முடிவுறுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 05 ஏப்ரல் 2019 ஆம் திகதி 1000 மணிக்கு நடைபெறும். விலைமனுதாரர்கள் வைத்தியசாலை தளத்தை பார்வையிட்ட பின்னர் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

8. பெறுகை ஆவணங்கள் **மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 17 ஏப்ரல் 2019 ஆம் திகதி 1000 மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி .ஆ.கேதீஸ்வரன்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பெரிது),**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**சுகாதாரக்கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், 40000.**

021-222-0811, 021-222-0809 மின்னஞ்சல்:capdhsnp@gmail.com தொலைநகல்: 021-222-0808. www.np.gov.lk